MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# ஆசிய நாட்டுச் சிறுகதைகளில் மலாய் மொழிச் சொற்களும் வழக்குச் சொற்களும்

| | |
|---|---|
| ஞா. விஜயலட்சுமி,<br>முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழ்),<br>அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, (தன்னாட்சி)<br>சிவகாசி. | முனைவர் பா. தமிழரசி,<br>உதவிப் பேராசிரியர், (தமிழ்த்துறை)<br>அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,(தன்னாட்சி)<br>சிவகாசி. |

DOI 10.5281/zenodo.12753460.

**Abstract :**

"Language" is what helps others to understand their ideas and we to understand others' ideas. "Language" is a tool of communication but it also includes various biological elements and cultural conditions such as the art of speaking, history, social status, customs, morals and thoughts. Different groups of people who can speak two different languages try to express their ideas and thoughts by adding some words in the language spoken by the other group along with many words in their own language. The Tamil community living in Malaysia and Singapore is also affected by such social environment. It has become a habit to add several Malay words to Tamil words.By looking at the short stories published in the country, we can know in detail how "Malay language" has become a case word in the diaspora community and established through this article.

Key Words : Short stories – Malay Literature – Tamil words – Morals

**முன்னுரை**

தம் கருத்துக்களை பிறர் அறியவும், பிறர் கருத்துக்களை நாம் அறியவும் உதவுவது “மொழி” ஆகும். “மொழி” ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி என்றாலும் அதைப் பேசுகின்ற கலை, வரலாறு, சமூகநிலை, பழக்கவழக்கம், ஒழுக்கநெறிகள் மற்றும் எண்ணங்கள் போன்ற பல்வேறு வாழ்வியல் கூறுகளையும், பண்பாட்டு நிலைகளையும் கொண்டு விளங்குகிறது.

இருவேறு மொழிகள் பேசக் கூடிய வெவ்வேறு தரப்பு மக்கள் தங்கள் கருத்தினையும் எண்ணத்தினையும் புலப்படுத்தும் முயற்சியாக தம் மொழியில் உள்ள பல சொற்களோடு அடுத்த தரப்பினர் பேசும் மொழியில் உள்ள சில சொற்களைச் சேர்த்துப் பேசுகின்றனர். மலேசியா, சிங்கப்பூர் வாழ் தமிழ்ச் சமுதாயமும் அவ்வாறான சமூகச் சூழலால் தாக்கமுற்று. தமிழ்ச் சொற்களில் பற்பல மலாய் மொழிச் சொற்களை சேர்த்துப் பேசும் பழக்கம் ஒரு வழக்கமாகி விட்டது.

அந்நாட்டில் வெளிவந்த சிறுகதைகளை ஆய்ந்து நோக்கினால் “மலாய்மொழி” புலம் பெயர்ந்த சமூகத்தில் வழக்குச் சொற்களாக மாறி எவ்வாறு நிலைபெற்றுள்ளது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக விரிவாக அறியலாம்.

**ஆசிய நாடுகளில் தமிழ் மற்றும் மலாய் மொழி**

இந்திய மொழிகளில் “தமிழ்” இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், புருனே, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் அதிகாரபூர்வ மொழியாகும். மேலும் கிழக்கு திமோர் மற்றும் தாய்லாந்தின் சில பகுதிகளில் 290 மில்லியன் மக்களால் பேசப்படுகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

புலம்பெயர்ந்த நாட்டில் குடியேற்றங்களை மேற்கொண்ட தமிழ் மக்களின் சமூக வாழ்வியலில் அந்நாட்டு தட்ப வெப்பநிலை, உணவு, உடை, சட்டதிட்டங்கள், கல்வி, வாழும் சூழல் முதலியன பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தாவிடினும் அந்நாட்டில் பெரும்பான்மையினர் பேசக்கூடிய ஆட்சிமொழி (மலாய்மொழி) அந்நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கும் வாய்க்கப் பெறுகிறது.

தமிழ் வீட்டு மொழியாக ஆன போதும், பள்ளிகளிலும், மேற்படிப்புக்கும் அந்நாட்டு அரசாங்கம் ஆட்சி மொழியை தமிழர்கள் பயின்றாக வேண்டிய (மலாய் மொழியை) கட்டாயத்தை உருவாக்குகிறது.

**மலாய் மொழி**

மலாய் மொழியானது "மலாயோ பொலினேசியா ஆகத்துரோனேசிய" (Austronesic) மொழிக் குடும்ப பிரிவில் அடங்கியுள்ள "பொலினேசிய" (Polynesia) மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

இதனை மலாயோ பொலினேசிய (Malaya polynesia) மொழிக் குடும்பம் என சிறப்பித்துச் சொல்வர்.

மலேசியா – மலையும் மலை சார்ந்த இடம் ஆக இருந்ததால் மலையூர் - Melayu எனும் ஊரில் இருந்து வந்தவர்கள்.

மலை – மலையம் - மலையு – மலாயு – "மெலாயு" என்றானது. மலாய் மொழியின் பிறப்பிடம் சுமத்திரா தீவாகும். தென் சுமத்திராவின் தாத்தாங் ஆற்றுப் பகுதிகளில் 7ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டன. அந்த கல்வெட்டுகளில் "மலாய் எழுத்துக்கள்" இருப்பதும் உறுதி செய்யப்பட்டது. தெற்காசியாவின் மலாயா தீவு கூட்டப் பிரதேசத்தில் உள்ள இந்தோனேசியா, மலேசியா, புரூணை, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்சு ஆகிய நாடுகளில் மலாய் மொழி பேசப்படுகின்றது.

இரண்டாம் நூற்றாண்டு காலகட்டத்தில் அதாவது ஆங்கிலேயர் வருவதற்கு முன்னரே 'மலாயா' என்ற பெயருடன் தான் "மலேசியா" இருந்தது. மலாய் மொழிக்கான மூலச் சொற்களில் பெருமளவு இந்தோனேசிய மொழிச் சொற்கள் காணப்படுகிறது.

**ஆசிய நாட்டு தமிழ்ச் சிறுகதைகளில் மலாய்மொழி**

ஒரு மூலமொழியில் (தமிழில்) உள்ள சொல் அல்லது சொற்றொடர் வேற்றுமொழி கலப்பால் (மலாய்) விளங்கிக் கொள்ள இயலாமை வரும்போது அதற்கு இணையாக மூல மொழியிலேயே விளக்கம் தந்து அனைத்துத் தமிழ் இனத்தவரும் அவ்வகை இலக்கியத்தை ரசித்திட உதவுதல் இலக்கியச் சிறப்பாகும்.

தமிழ் இலக்கியம் எல்லா நாட்டிலும் வாழக்கூடிய மக்களால் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகிறது. ஆயினும் அவர்கள் வாழும் நாட்டின் மொழிக்கூற்று (அல்லது) தொனி இரண்டும் சமூக விழுமியங்களை பறைசாற்றும் சிறுகதைகளில் நிச்சயம் இடம்பெறும்.

அதை எந்நாட்டினரும் உணர்ந்து மகிழ்ந்திட "மொழிச் சிக்கல்" அல்லது மொழியைப் பற்றிய புரிதல் இல்லாமை தடையாகிறது. அவ்வாறு மலேசியா – சிங்கப்பூர் சிறுகதைகளில் இடம் பெறுகின்ற மலாய் மொழிக்கான தமிழாக்கத்தை வகைமை செய்யும் பொருட்டு இக்கட்டுரை விரிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

**மண்ணுக்கே உரிய தனிச் சிறப்புடன் கூடிய சொற்கள்**

மலேசிய நாட்டில் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சஞ்சிக் கூலிகளாக கொண்டு வரப்பட்டனர். மலைநாட்டில் தோட்டப்புறத் தொழிலாளர்களாக மாறி தங்கள் குடும்பங்களோடு குடியிருப்பை நிறுவினர். உழைப்பைத் தவிர வேறு எதையும் அறிந்திராத தமிழர்களுக்கு பணியிடங்களுக்கு அருகிலேயே கோவில்கள், தமிழ் பயில கல்விச் சாலையும் ஏற்படுத்தப்பட்டது. ஆதலால் மொழி வளர்ந்தது அது தனக்கே உரிய தனிச்சிறப்புடன் வலம் வந்தது. “கலர் பூ” என்னும் சிறுகதையில் வரும் ஒரு தொடரில்,

**“சற்று நேரம் மனைவியை அங்கேயே நிற்கவைத்து விட்டு பக்கத்திலுள்ள ‘ஓட்டுக்கடைக்கு’ விரைகிறான்”** (ய.சி.தொ – கலர் பூ - சு. கமலா – ப.எண்:22 பினாங்கு)

ஒட்டுக்கடை – தெரு முனையில் இருக்கக்கூடிய சின்ன மளிகை கடையாகும். “சிலர் ஒட்டுக்கடைக்கு போய் சாமான் வாங்கப் போறேன்” என்று மலேசியத் தமிழர்கள் வழக்கு தமிழில் பேசுவதுண்டு.

“மாணிக்கம் காணாமல் போகிறான்” என்னும் சிறுகதையில் **“குடும்பத்தில் சண்டையா? ஏசினீர்களா? அடித்தார்களா?”** என்ற வரியில் (அ.த.இ) – மாணிக்கம் காணாமல் போகிறான் - ரெ.கார்த்திகேசு – ப.எண்: 168. கதையில் முத்துச் சாமியின் தம்பி மாணிக்கம் பரிட்சையில் தேர்வு பெறாததால் வீட்டை விட்டு ஓடி போகிறான். காவல் துறை அதிகாரி தமிழர் ஒருவர் “குடும்பத்தில் பிரச்சனையா? ஏதாவது கோபத்தில் பேசிவிட்டீர்களா? என்பதை **“ஏசினீர்களா?”** என்ற மலேசிய வழக்குச் சொல்லை அந்த இடத்தில் பயன்படுத்துகிறார்.

“வெடித்த துப்பாக்கிகள்” எனும் சிறுகதையில் **“அவர்களின் கையில் 7.62 மருந்துகளைப் பாவிக்கக் கூடிய எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகள் இருந்தன”** எனும் வரியில் (அ.த.இ - வெடித்த துப்பாக்கிகள் - சை.பீர்.முகமது ப.எண்: 161)

**“பாவிக்க”** எனும் சொல் “பயன்படுத்த” என்று பொருளாகும். ஏதிரிகளின் கையில் 7.62 மருந்துகளைப் பயன்படுத்தக் கூடிய எஸ்.எல்.ஆர் துப்பாக்கிகள் இருந்தன என்று மலேசிய ராணுவ வீரர் ஒருவர் பேசிக் கொள்வதாக இந்த உரையால் அமைந்திருக்கிறது.

“சுற்றிப் பார்க்க வந்தவர்” எனும் சிறுகதையில் **“அப்பு இவுகதான் உங்க மருமகன். அப்பாவுகள எப்பப் பார்த்தாலும் ‘பகடி’ செய்யுவாக”** (அ.த.இ - சுற்றிப் பார்க்க வந்தவர் - மா. இளங்கண்ணன் ப.எண்: 259) என்ற வரியில் ‘பகடி’ எனும் சொல் பரிகாசம். நையாண்டி கேலிசெய்தல் என்று பொருளாகும். சிங்கப்பூரைச் சுற்றிப்பார்க்க வந்த காரைக்குடி பெரியவரிடம் அங்கேயே புகலிடமாக வேலை பார்க்க வந்த மணியின் மனைவியின் பேச்சில் தொனிக்கும் பேச்சு வழக்கு சொல் இது. என்னதான் புகலிடமாக சிங்கப்பூர் சென்றிருந்தாலும் தமிழ் மண்ணின் பேச்சு வழக்கு இயல்பாக வந்துவிடுகிறது. அதாவது வேலை நிமித்தமாக சிங்கப்பூர் வந்தாலும் இந்திய நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டின் அந்தந்த மாவட்ட வழக்குச் சொல் பேச்சினூடே வந்துவிடும்.

‘நாடோடிகள்’ என்னும் சிறுகதையில் **“திருஷ்டி பரிகாரத்திற்குப் பெண்களிலே சிலர் தமிழ் பேசினர். ஆனால் அதுவுங்கூடச் சிரமப்பட்டுக் “கொன்னிக் கொன்னி” நுனி நாக்கில் பேசுவதாய்**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**அமைந்திருந்தது.''** (அ.த.இ. – நாடோடிகள் - இராமகண்ணபிரான், ப.எண்: 222) என்ற வரியில் வளர்ந்த நாடான சிங்கப்பூரில் வசிக்கும் தமிழர்கள் பெரும்பான்மை ஆங்கிலேத்திலேயே உரையாடுகின்றனர். அதனாலேயே தமிழை சிரமப்பட்டு பேசுவதை **''கொன்னி கொன்னி''** பேசுகின்றனர் எனத் தமிழை நன்றாக பேசும் சில சிங்கப்பூர் தமிழர்கள் கூறுவதுண்டு.

அதே சிறுகதையில் **''வாழ்க்கையில் எல்லாத்தையும் 'வல்லிசா' அனுபவிக்கத் தயங்கக் கூடாது சார்''!** (அ.த.இ - நாடோடிகள் - இராமகண்ணபிரான் ப.எண்: 223) என்ற வரியில் 'வல்லிசா' என்பது முழுவதுமாக என்று அர்த்தம். தமிழ்நாட்டிலும் சில கிராமபுறங்களில் சில பாட்டிமார்கள் 'சோறு வல்லிசா முடிஞ்சுபோச்சு' என்று கூட சொல்வதுண்டு. அதே வார்த்தையை மலேசியத் தமிழர்களும் கூறுகின்றனர்.

அதே கதையில் **''யார்ட்லி கிரீம்'' 'இன்டிமேட் சென்ட்' வகையறாப் பரிசுகளைத் தட்டிச் சென்றனர் வனிதையர்''** (அ.த.இ - நாடோடிகள் - இராமகண்ணபிரான் - ப.எண்: 224) என்ற வரியில் சிங்கப்பூரில் இளம் பெண்களை வனிதையர் என்ற சொல்லால் குறிப்பிடுவதுண்டு.

மேலும் **''அக்கம் பக்கத்தாரிடம் உசாவிய போதும், தனபால் போன இடம் தெரியவில்லை''** (அ.த.இ - நாடோடிகள் - இராமகண்ணபிரான் ப.எண்: 229) என்ற வரியில் "உசாவுதல்" என்பது விசாரித்தல், கேட்டல் என்ற பொருளில் சிங்கப்பூர் தமிழர்கள் பேசுவதுண்டு.

"கரைசேருமா" என்னும் சிறுகதையில் **''அதற்குள் அவனது பிறந்தநாள் வரவே அடுத்த மாதம் வாங்கிக் கொள்ளலாம் என்று வாளாவிருந்து விட்டேன்''** (ய.சி.தொ – கரைசேருமா? – சு.கமலா – ப.எண்: 52 பினாங்கு) மலேசியத் தமிழர்கள் "செயல்படுத்தாமல் விட்டு விட்டேன்" என்பதை **''வானவிருந்து விட்டேன்''** என்ற வழக்குச் சொல்லால் பேசுகின்றனர்.

இவ்வாறு மலேசியா சிங்கப்பூர் நாடுகளில் வசிக்கும் தமிழர் தம் மண்ணுக்கே உரிய வழக்குச் சொற்கள் யாவும் அந்நாட்டு சிறுகதைகளில் பதிவாகி உள்ளது.

**பழைய தமிழ்ச் சொற்கள்**

மலேசியாவிற்கும், தமிழர்களுக்கும் நீண்ட கால வரலாற்று தொடர்பு உண்டு. ஏனென்றால் மலாக்கா (மலேசியாவின் வரலாற்று சிறப்பு மிகுந்த இடம்) போன்ற நகரத்தை பரமேசுவரன் எனும் ஓர் இந்து அரசன் ஆட்சி செய்தான் என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன. அவ்வகையில் மலாய்காரர்கள் பயன்படுத்துகின்ற மலாய் மொழியிலும் தமிழ்ச் சொற்களை சிலவற்றை இனம் காணலாம்.

"கனியாத காய்கள்" எனும் சிறுகதையில் **''எங்களை வரவேற்கும் தோரணையில் கம்பீரமா நிற்கின்றது ''ராசா சாயாங் ஓட்டல்''** என்ற வரியில் (ய.சி.தொ – கனியாதகாய்கள். சு.கமலா பினாங்கு – ப.எண்: 24) "சாயாங்" என்பது அன்பு, பாசம், காதல் உணர்வைக் குறிக்கிறது. முன்னால் "ராசா" என்ற பெயரில் இடம்பெற்றிருக்கும் தமிழ்ச்சொல்லை அறியமுடிகிறது.

"கரை சேருமா" எனும் சிறுகதையிலும் **''துன் அப்துல் ரசாக் கட்டத்துக்குள் நுழைந்த அதே வேகத்தில் வெளியேறுகிறேன்''** என்ற வரியில் (ய.சி.தொ – கரை சேருமா – சு. கமலா பினாங்கு –


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

ப.எண்: 52) "துன்" எனும் அடைமொழி மலேசியாவின் உயரிய விருதுக்கு உண்டான பெயர் - "அப்துல் ரசாக்" எனும் அடுத்த சொல் "ராசா" எனும் தமிழ் பெயரை குறிக்கிறது.

ஆக "ராசா" எனும் தமிழ்ச்சொல் அந்நாட்டை (மலேசியா) ஆட்சி செய்து வரும் ஆட்சியாளர்கள் பலரது பெயரிலும் காணலாம். மலாய் மொழிக்கான வேர் தமிழ்ச்சொல்லில் இருந்து வந்துள்ளது என அறியலாம்.

**பயன்பாட்டு அடிப்படையிலான மலாய்ச் சொற்கள்:**

மலாய் மொழிக்கான ஒலிப்பு குறிப்புச் சொல் மலாய் மொழியில் இருந்தாலும் அம்மொழியின் வரிவடிவம் ஆங்கிலத்திலேயே எழுதப்படுகிறது. உதாரணமாக "Clinic" எனும் ஆங்கிலச் சொல்லை மலாய் மொழியில் "Klinik" என்று எழுதுகின்றனர். ஒலிவடிவம் ஒன்று போலவே உள்ளது. பயன்பாட்டு அடிப்படையில் உள்ள சில மலாய் சொற்களையும் அதன் விளக்கங்களையும் சிறுகதையின் வழி காணலாம்.

"சுமை" என்னும் சிறுகதையில் **"அவன் பண்டாராயா அலுவலகத்தின் முன்னால் வந்து நின்று பித்து பிடித்தவனைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்"** (அ.த.இ - சுமை – சாமிமூர்த்தி – ப.எண்: 180) "பண்டாராயா" என்றால் "நகரம்" என்று பொருள். நகரத்தின் அலுவலகப் பணி சார்ந்த இடத்தை "பண்டாராயா" என்ற மலாய் சொல்லில் அழைக்கின்றனர்.

அதே சிறுதையில் **"பண்டாராயா டீ சட்டையைக் கழற்றி எங்கரில் மாட்டி வைத்து"** என்ற தொடரில் நகரத்தின் சுற்றுப்புறத் தூய்மை செய்யும் பணியில் ஈடுபடுபவர்கள் "பண்டாராயா" என்ற பெயர் அச்சிடப்பட்ட சட்டை அணிந்து வேலை செய்வர்.

"உதிரிகள்" எனும் சிறுகதையில் **"அந்த கும்பலின் தளபதி மீ கோரங்" கட்டிய ரப்பர் பட்டையால்"** என்ற வரியில் (அ.த.இ. – உதிரிகள் - புதுமைதாசன் - ப.எண்: 217) "மீகோரங்" என்பது மைதா மாவில் தயாரிக்க பெற்ற வளைவு நெளிவான உணவுப் பொருளாகும். கதையில் சிங்கப்பூர் இளைஞர்கள் சிலர் தலைமுடியை பெண் பிள்ளைகள் போன்று ரப்பர் பட்டையால் கட்டிக் கொள்வர். அது அந்த தேசத்து நாகரீகம் ஆகும்.

'மதிப்பீடுகள்' எனும் சிறுகதையில் **"நான் வரும் போதெல்லாம் 'சரோங் கபாயா' உடையோடு முக மலர்ச்சியுடன் வரவேற்பாள் அவன் தாய்"** எனும் வரியில் (அ.த.இ - மதிப்பீடுகள் - நா. கோவிந்தசாமி ப.எண்: 234) 'சரோங் கபாயா' என்பது மலேசியாவில் வாழும் மலாய் இனத்தவரின் பாரம்பரிய உடையை குறிப்பதாக அமைகிறது.

'ஒருவனுக்கு' எனும் சிறுகதையில் **"லாரி தவக்கே வசதியுள்ளவனாமே' எப்படியும் ஆயிரம் ரெண்டாயிரம் கொடுப்பான்னு நினைக்கிறேன்"** என்ற வரியில் (ய.சி.தொ – ஒருவனுக்கு – சு.கமலா பினாங்கு – ப.எண்: 75) 'தவக்கே' எனும் மலாய் சொல்லுக்கு "முதலாளி" என்று பொருளாகும். மலேசியத் தமிழர்களில் சரக்குந்து ஓட்டுபவர்கள் பெரும்பான்மையோர் இருப்பர். அவர்களே சொந்தமாக சரக்குந்து நிறைய வாங்கி முதலாளி ஆனவர்களும் உண்டு. ஆதலால் சரக்குந்து வைத்து வணிகம் செய்து பணக்காரர் ஆனவர்களை அவர் லாரி முதலாளி மிகுந்த வசதியானவர்கள் என்பதை "லாரி தவக்கே" என்று கூறுவதுண்டு.


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**பண்பாட்டு அடிப்படையிலான சொற்கள்:**

மலேசியர் தம் பண்பாடு அம்மக்கள் நாடு தாண்டி புலம் பெயர்ந்த போதிலும் அவர்களது நாட்டில் அவர்களால் கடைபிடிக்கப்படும் பழக்கவழக்கங்கள், உறவுமுறையில் இணக்கம், கோயில்களில் பூஜை முறைகள், விழாக்களை அனுசரிக்கும் முறை முதலியன யாவும் தமிழ் பண்பாட்டை விட்டுக் கொடுக்காத தன்மையாகும். ஆண்டு தோறும் அவர்கள் கொண்டாடும் தைப்பூசத் திருவிழாவிற்கு கோலாலம்பூரில் அமைந்துள்ள பத்துமலை முருகன் கோவில் மட்டுமல்லாது ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கக்கூடிய முருகன் கோவில்களில் சிறப்பு பூஜை நடக்கிறது. அன்றைய நாளை இந்துகளுக்கு விடுமுறை தினமாக அரசாங்கம் அறிவிக்கிறது. தமிழ் கடவுள் முருகனை வழிபடுவதில் மட்டுமல்ல கொண்ட மொழியான தமிழுக்கும் அவர்கள் சிறப்பு செய்கிறார்கள். அப்படியான பண்பாட்டை அடிப்படையாக கொண்ட சொற்கள் சிலவற்றைக் காணலாம். “அகதி” எனும் சிறுகதையில் **“பாங்கோன் அப்படின்னு மலாய்லே சொல்லி எழுந்திருக்க சொன்னாங்க”** என்ற வரியில் (அ.த.இ - அகதி – உதுமான்கனி – ப.எண்: 243) மலேசிய நீதிமன்றத்தில் நீதிபதி வந்து தன் அமரும் இருக்கையில் அமரும் முன்னதாக உடன் இருக்கம் டவாலி அனைவரையும் எழுந்து நிற்க சொல்வதை ‘பாங்கோன்’ என்ற மலாய் சொல்லினால் உரக்கக் கூறுவார்.

“கலங்கிய குட்டைகள்” எனும் சிறுகதையில் **“நானோ இன்னும் பத்திரிகையில் வெளியாகும் ஜவாத்தான் கோசொங் பகுதியை அலசிக் கொண்டிருக்கிறேன்”** என்ற வரியில் (ய.சி.தொ – கலங்கிய குட்டைகள் - சு.கமலா பினாங்கு – ப.எண்: 37) மலேசியத் தமிழர்களே சிலர் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தை “கோசமா” இருக்கு என்பர். “ஜவாத்தான் கோசொங்” என்ற மலாய் சொல்லுக்கு பத்திரிகைகளில் இடம் பெறும் ‘வேலைவாய்ப்பு பகுதி’ (அ) காலியாக உள்ளது என்று அர்த்தமாகும்.

“ஒருவனுக்கு” என்ற சிறுகதையில் **“டத்தோ கிராமத்து சாலை வழியே வந்து கொண்டிருந்தேன்”** என்ற வரியில் (ய.சி.தொ – ஒருவனுக்கு – சு.கமலா பினாங்கு – ப.எண்: 73) ‘டத்தோ’ என்பது மலேசிய அரசாங்கம் வழங்கும் உயரிய விருதாக கருப்படுகிறது. சமூக நிலையில் உயர்ந்த ஆன்றோர்களுக்கு “டத்தோ” விருது வழங்கப்படுகிறது.

இவ்வாறு மரியாதை நிமித்தமாகவும், மலேசிய அரசாங்கத்தின் உயரிய விருதும் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு மலாய் மொழியிலேயே இருக்கின்றது.

**உறவு முறைச் சொற்கள்:**

உறவுமுறைகளைக் குறிப்பிடப் பயன்படும் சொற்கள் எல்லா மொழிகளிலும் உள்ளன எனினும், அச்சொற்களின் உருவாக்கத்துக்கு அடிப்படையாக அமைந்துள்ள பண்பாட்டு அம்சங்கள், மொழிக்கு மொழி, சமுதாயத்திற்கு சமுதாயம் வேறுபட்டாலும் தமிழ்ச் சமூகத்தில் உறவு முறைகளின் அழகு விசித்திரம் தான். அதனை உலகமே கொண்டாடுகிறது என்றே கூறவேண்டும். அவை சிறுகதைகளில் மாற்றுமொழியான மலாய்மொழியில் எவ்விதம் எடுத்தாளப்படுகிறது என்பதையும் அதன் விளக்கத்தையும் காணலாம்.

“கசப்பு மாத்திரைகள்” எனும் சிறுகதையில் **இன்னும் என்னடா ஒன்னத்தையும் காணோம்னு “கூட்டாளிங்கெல்லாம்” கேட்கிறப்போ எனக்கு எவ்வளவு அவமானமா இருக்கு”** என்ற வரியில் (ய.சி.தொ – கசப்பு மாத்திரைகள் - சு.கமலா (பினாங்கு) – ப.எண்: 49) **“கூட்டாளிகள்”** என்ற சொல் நண்பர்களை குறிக்கிறது. ஆண்நண்பர்கள் மலேசியாவில் தங்களுக்குள் ‘கூட்டாளி’ என்ற வார்த்தையை


http://Creativecommons.org//license/by/4.0/.

பயன்படுத்துவர். இக்கதையில் குழந்தையில்லை என்று கூட்டாளிகள் கேட்கும்போது அவமானமா இருக்கு என்று கூறுவதாக கதைத் தலைவன் கூற்று அமைகிறது.

“மாணிக்கம் காணாமல் போகிறான்” எனும் சிறுகதையில் “மாணிக்கம் அனாக் லெலாக்கி மாடசாமி” என்ற தொடரில் (அ.த.இ - மாணிக்கம் காணாமல் போகிறான் - ரெ. கார்த்திகேசு – ப.எண்: 168) மாணிக்கத்தின் தகப்பனார் பெயர் மாடசாமி என்பதே அர்த்தமாகும். கடிதங்கள் எழுதும் போதும், அரசாங்கத்தின் வேலைவாய்ப்பு. முதலானவற்றிற்கு தகப்பனார் பெயரை படிவங்களில் எழுதும் முறை மலேசிய நாட்டில் உள்ளது. அந்த பத்தியில் “அனாக் லெலாக்கி” என்றே எழுதப்பட்டிருக்கும்.

“நடப்பு” எனும் சிறுகதையில் “சற்று தள்ளி நடுநாயகமாக ஒரு ஈஸி சேரில் பாச்சிஹுசான் மடியில் தன் பேரனுடன் அமர்ந்திருந்தார்” என்ற வரியில் (அ.த.இ - நடப்பு – மா.சண்முகசிவா – ப.எண்: 184) “பாச்சி” எனும் மலாய் சொல்லுக்கு ‘மாமா’ என்று அர்த்தமாகிறது. மாமா ஹுசான் மடியில் தன் பேரனுடன் அமர்ந்திருந்தார். மலாய் இனத்தவருள் மாமன் மட்டுமல்லாது குடும்ப நண்பர், தந்தையின் சகோதரர் முதலானோரையும் பாச்சி (மாமன்) என்று குறிக்கும் சொல் பொதுச் சொல்லாக அவர்களது உறவு முறைகளில் உள்ளது.

இவ்வாறு உறவுமுறைச் சொற்களும் மலாய் மொழியில் நாகரீகத்துடன் மலாய் மொழியில் வழங்கி வருவதை காண்கிறோம்.

**ஈர்ப்பு மொழிக் கூறுகள்:**

ஈர்ப்பு மொழிச் சொற்கள் மலேசியாவில் நிரம்ப உண்டு. தமிழர்கள் தமிழர்களையே “ஐயா” என்றும் சிறியவர் ஆனாலும் பெரியவர்கள் ஆனாலும் கூறுவதுண்டு. அதுபோல “ஆமாவா!” என்றும் “சரிலா” என்றும் ஆங்கிலம் கலந்து “ok லா” என்று கூறக் கேட்பதுண்டு. இது மலேசியாவில் வாழும் தமிழர்கள் பலரும் பேசக் கேட்கலாம். இம்மாதிரியான “ஈர்ப்புச் சொற்கள்” தென்னிந்தியாவிலேயே ஊருக்கு ஊர் மாற்றம் ஏற்படுவது போல மலேசியாவிலும் சில சொற்களைக் காணலாம். அவை சிறுகதைகளில் பதிவானதை இனம் காணலாம்.

“மாணிக்கம் காணாமல் போகிறான்” என்னும் சிறுகதையில் “இது என்ன ஓராங் மிலாயு என்று தெளிவாகத் தெரிகிறது” என்ற தொடரில் “ஓராங்” என்பது ‘நபர்’ அல்லது ‘ஆள்’ என்பதை குறிக்கும். அடுத்து வரக்கூடிய ‘மிலாயு’ என்பது மலாய் இனத்தவரை குறிக்கும். “மலாய்கார ஆள்” என பொருள்படும். இதேபோல் அங்குள்ள மலேசியத் தமிழர்களை “ஓராங் இந்தியா” என்று மலாய்காரர்களும் இந்தியத் தமிழர்களை மலேசியத் தமிழர்கள் “ஊர்க்காரங்க” என்றும் அழைப்பதுண்டு.

‘கலங்கிய குட்டைகள்’ என்னும் சிறுகதையில் **‘அப்படின்னா… இதுவும் டுக்கா சித்தாவில் தான் முடியும்னு சொல்லு’’** என்ற வரியில் “ஓ இதுவும்” வருத்தமான செய்திதான! என்ற அர்த்தத்தில் பேசுவதாக கூற்று அமைகிறது.

இருவர் பேசிக் கொள்ளும் போது கேலிப் பேச்சிற்கென வேலை கிடைக்கவில்லையா? என்பதை இந்த முறையும் ‘டுக்கா சித்தா’ தான என்று பேசிக் கொள்ளும் வழக்கம் உள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**முடிவுரை:**

இலக்கியத்தின் மொழி என்பது என்றுமே அந்தமொழி பேசும் இனத்தவர் மட்டுமல்லாது மற்றமொழி பேசும் வாசகரும் உணர இடம் கொடுப்பது மொழியின் இன்றியமையாததாகும். அந்த வகையில் புலம்பெயர்ந்த தமிழர்கள் மலேசியா – சிங்கப்பூர் நாடுகளில் குடியிருப்பை நிறுவி தன் தாய் மொழியிலிலேயே இலக்கியம் படைக்க முற்படும் போது தான் வாழும் நாட்டின் பேச்சு வழக்கு (அ) பிறமொழி கலப்பு கட்டாயமாக அவர்களது இலக்கியங்களிலும் இடம்பெற்று விடுகிறது. தமிழை தாய் மொழியாக கொண்ட யாவரும் புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தை வாசிக்க முயலும் போது எழும் மொழிச் சிக்கலை நிறைவு செய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

இவ்விரு நாட்டுச் சிறுகதைகளில் இலக்கிய நடை என்று பார்க்கும் போது தேவைப்படும் இடங்களில் மலாய் மொழிச் சொற்களும் வழக்குச் சொற்களும் இடம் பெற்றாலும் தமிழ் மொழியின் அழகை சிதைக்காத வண்ணம் எழுத்தாளப்பட்டுள்ளது.

**துணை நூற்பட்டியல்**

1. ய. சிறுகதைத் தொகுப்பு – கமலா, சு (பினாங்கு), மலேசியா.

2. அயலகத் தமிழ் இலக்கியம் (தொ.ஆ), கந்தசாமி, சா., சாகித்ய அகாதெமி, புதுதில்லி.

3. மலாய் மொழியில் தமிழின் தாக்கம் (வலை ஒளிபதிவு) – திருமாவளவன், இரா. – https://www.youtube .com/live/wmuU7HE3vpY?si=4YChoput79tg9Bbu

**சுருக்கக் குறியீட்டுச் சொற்கள்:**

ய.சி.தொ. – ய. சிறுகதைத் தொகுப்பு.

அ.த.இ. – அயலகத் தமிழ் இலக்கியம்


http://Creativecommons.org//license/by/4.0/.